பாலர் கல்வி

தொகுதி 28	சோபகிருதுஸு மாசி - பங்குனிமீ 1964 மார்ச்	பகுதி 12

தென்னிந்திய ஆசிரியர் சங்க நிருவாகக் குழுவினர் கூட்டம்

இக்கூட்டம் கடந்த பிப்ரவரி மாதம் 8ஆந் தேதி கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் நிகழ்ந்தது. தஞ்சை மாவட்ட ஆசிரியர் சங்கத் தலைவர், செயலர், நிருவாகக் குழு உறுப்பினர் இவர்கள் நிருவாக விஷயங்களை ஆய்ந்தனர். South Indian Teacher, பாலர் கல்வி இவை மேலும் பயனுற வேண்டில் இவற்றுள் அவ்வப்போது ஆசிரியர்களது குறைபாடுகளையும், இக்குறைபாடுகள் தீர நாம் செய்து வருவன யாவை என்பதையும் பிரசுரஞ் செய்ய வேண்டும் எனப் பகர்ந்தனர் நிருவாகக் குழுவினர். அண்மையிற் காலஞ் சென்ற உயர்திரு டி. பி. சீனிவாசவரதன், உயர்திரு S. பழனிசாமி (கல்விக் கூட்டு இயக்குநர்) இவர்கள்பற்றி அநுதாபத்தைத் தெரிவித்து, உயர்திரு டி. பி. சீனிவாசவரதனது ஞாபகத்திற்காக ஓர் உருவப் படம் விரைவில் தயார் செய்ய வேண்டும் என்றும், தென்னிந்திய ஆசிரியர் சங்கப் பொன்விழாக் கட்டிடத்தில் இவரது பெயரால் ஒரு மாடியறை அமைக்க வேண்டும் என்றும் விரும்பினர். தமிழாசிரியரைப் பற்றி அண்மையில் வந்துள்ள அறிக்கையின் குறைபாடுகளை ஆய்ந்து, 1963 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் ஆசிரியராகப் பணிசெய்பவருள், ஆசிரியர் பயிற்சி பெறாத தமிழாசிரியர்க்கு முதன்முதலிற் பயிற்சி பெற வசதி அளிக்க வேண்டும் என்றும், இவ்வாறு இவர்கள் பயிற்சி பெறும் வரையில் இவர்களுக்கு எப்போதும் போல் ஊதிய உயர்வு முதலியன அளிக்கப் பெறவேண்டும் என்றும் தமது கருத்தினை எடுத்துக் கூறினர் உறுப்பினர். மே மாதம் நிகழவிருக்கும் சென்னை மாநிலக் கல்வி மாநாட்டிற்குச் செய்ய வேண்டுவன எவை என்பதைப்பற்றி ஆய்ந்தது நிருவாகக் குழு.

சட்ட சபையில் ஆசிரியர் தொகுதியை ஒழிக்கக்கூடாதென்றும், முன்போல் ஆசிரியர்களின் பிரதிநிதியாக ஆசிரியர் பணி செய்ய வாய்ப்பு வேண்டுமென்றும் ஒருமனதாக வெளியிட்டனர் நிருவாகக் குழுவினர்.

அன்று மாலை குடந்தைக் கல்விச் சங்கத்தினர் அளித்த விருந்தில் தென்னிந்திய ஆசிரியர் சங்க நிருவாகக் குழுவினரும், கும்பகோணத்திலுள்ள பள்ளிகளின் தலைமையாசிரியரும், நிருவாகம் கொள்பவரும் கல்வி மாநாட்டைச் சிறப்புற நடத்துவதுபற்றி ஆலோசனை செய்தனர். பெண்கள் கல்லூரி முதல்வர் திருமதி ராதா அம்மை

யாரும், கும்பகோணம் கல்லூரி முதல்வர் அவர்களும், இக்கூட்டடத்திற் கலந்து கொண்டனர்.

54 ஆவது கல்வி மாநாட்டுத் தலைவர்

இவ்யாண்டு மே மாதம் நிகழவிருக்கும் கல்வி மாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளார் உயர் திரு A. சீநிவாசராகவன் என்பதை யாம் பெருமகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம். ஆசிரியர்களுள் மாணிக்கம்போல் விளங்கும் இப்பெரியாரைப் பற்றி அறியாதார் இலர். கல்விச் செறிவும், அடக்கமும், வரையிலா ஊக்கமும் வாய்ந்த இவர் உலகுக்கு ஓர் எடுத்துக்காட்டாவர். ஆங்கிலத்திலும் தேனினுமினிய தமிழ் மொழியிலும் ஒப்பற்ற புலமை வாய்ந்தவர் இவர்; ஆசிரியரிடம் அன்பும், நன்மதிப்பும் கொண்டவர்; ஆசிரியரது நிலையை நன்கறிந்தவர்; ஆசிரியர் ஓங்கச் செய்யவேண்டுவன யாவை என்பதை ஐயந்திரிபற உணர்ந்தவர். இவர்தம் தலைமையில் மாநாடு வெற்றி பெறும் என்பது திண்ணம். இவர் தமக்கு எமது வாழ்த்தும் பாராட்டும் உரியனவாகும்.

இலவசக் கல்வி

செகண்டரிக் கல்வி பற்றிச் சென்னை அரசாங்கம் திட்டம் வகுத்திருப்பது மிகவும் போற்றத்தக்கது; இந்நாட்டிலுள்ள மாநிலங்களிலே முதன்முதலாக இது நந்தமிழகத்தில் துவங்கப்பெறுவது என்பது நமக்குக் களிப்பினை விளைவிக்கின்றது. இதுபற்றிய முயற்சிகளைப் பலனுறச் செய்த அரசியலார்க்கு நமது அன்பு கலந்த நன்றியும் பாராட்டும் உரியனவாகும். சென்னை மாநிலம் செய்த அரும்பெருஞ் சாதனைகளுள் இது ஒன்றாகும். கல்விபற்றிய வரையில் இஃது முதற் படியாகும். கல்வியின் தரம் ஓங்குவதற்கு நாம் செயற்பாலன இன்னும் பல உள. முதன்முதலாகப் பள்ளிகளிலே வகுப்பறைகளில் வரம்புக்கு மீறிய குழந்தைகளைச் சேர்க்காமலிருக்க முயற்சி செய்யவேண்டும். எவ்வளவு அநுபவமும் ஆற்றலும் வாய்ந்திருந்த போதிலும் அளவுக்கு மீறிய குழந்தைகளைக் கண்காணித்துக் கற்பிப்பது என்பது ஆசிரியர்க்கு இயலாததாகிவிடுகின்றது. நோட்டுப் புத்தகங்களைப் பார்த்துத் திருத்திக்கொடுப்பது, அவ்வப்போது பரீட்சை நடத்துவது, இவையன்றிப் பாடத்திட்டத்தோடு இணைந்த விஷயங்களைக் (Co-curriculur activities) கவனிப்பது இவைபோல்வன ஆசிரியர்க்குச் சுமையாகிவிடுகின்றன. அடுத்தபடியாக பாடச் சுமைகளைக் குறைக்கவேண்டும். பரீட்சை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வினவிடைகளை மனப்பாடஞ் செய்யும் பழக்கம் முற்றிலும் அகற்றப்பெறவேண்டும். மாணவ மாணவியர் தாமே கட்டுரை முதலியவற்றை எழுதும் ஆற்றல் பெறவேண்டும். விஞ்ஞானம் கற்கும்போது இவர்களே உபகரணங்களைக் கையாண்டு அநுபவம் பெற ஏற்ற வசதிகளை வழங்கவேண்டும். இது கல்வியின் தரம், கற்பிக்கும் ஆசிரியர், ஆசிரியைகள் இவர்களது ஊக்கத்தைப்பற்றியதாதலால், ஆசிரியர்கள் நல்ல பயிற்சியைப் பெற்றுத் தம் பணியை நன்கு ஆற்றச் செய்யவேண்டும்; இவர்களது ஊதியமும் சமூகத்தில் இவர்களது நிலையும் உயரவேண்டும்.

இலவசக் கல்வி அளிக்கத் தீர்மானஞ் செய்திருப்பதால் அரசியலார் உதவி பெற்று இயங்கும் பள்ளிகளின் நிலையைப் பற்றிப் பலர் கவலைகொள்கின்றனர்; இவ்வாறு அஞ்சவேண்டியதில்லை

என்று கூறியுள்ளார் நம் முதல் அமைச்சர். இத்தகைய பள்ளிகள் எப்போதும் போல் இயங்கினுல்தான், இவற்றில் கல்வியின் தரம் குறையாமல் இருக்கும். இத்தகைய பள்ளிகளிலே இதுகாறும் நிலவிவந்த முறைகள், வழக்கங்கள் முதலியன மாறுபடாமல் எப்போதும் போல் கல்வியின் நிலை ஓங்கியிருப்ப தற்கு ஆவன செய்வது அரசியலாரது முதற்பணியாகும்.

மெட்ரிக் முறைக் கருத்தரங்கு

முகத்தல், நிறுத்தல் முதலியன இப்போது மெட்ரிக் முறை அளவினங் கொண்டு நிகழ்ந்து வருவதாலும், இனிப் பள்ளிகளிலே பழைய அளவி னங்களைக் கற்றுக் கொடுத்தல் கூடாது என்ற ஆணை பிறந்துள்ளதாலும் மெட்ரிக் முறையைப் பற்றி முதன் முதலில் ஆசிரியர் அறியவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதுகாறும் பயன் பட்டு வந்த அளவினங்களில் $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$ போன்ற பின்னங்கள் தலைதூக்கி நின்றன; இப்போது தசம பின்னங்களே பயன்பெறும். ஆதலால் கற்பிக்கும் முறையிலே புரட்சி யொன்று ஏற்பட்டுள்ளது. மெட்ரிக் முறைப்படி அளவினங் களை எந்த எந்தப் படிவங்களில் எப்படி எப்படிக் கற்பிக்கவேண்டும்; மெட்ரிக் முயையைக் கைக் கொண்டுள்ளதால் இப்போதுள்ள பாடதிட்டத்திலிருந்து அகற்றப் பெறவேண்டியவை எவை எவை என்பன போன்றவை முதன் முதலில் ஆராயப்பெற்று, இவை பற்றிய கருத்துக்களை ஆசிரியர்க்கு அவசியம் அறிவிக்கவேண்டும். இந்த நோக்குடன் அண்மையில் சென்னைத் திருவல்லிக் கேணி இந்து உயர்நிலைப் பள்ளியில் இரண்டு நாட்கள் கருத்தரங்கு ஒன்று நிகழ்ந்தது; இது இராயப்பேட்டை மெஸ்டன் ஆசிரியர் கல்லூரியில் Extension Service ஆணையாளரால் இயங்கியது. துவக்கப் பள்ளிகளிலிருந்தும். உயர்நிலைப் பள்ளிகளிலிருந்தும் 68 ஆசிரிய ஆசிரியைகள் ஒருங்குகூடிக் கற்பிக்கும் முறைகளை ஆய்ந்தனர். மயிலை P. S. உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், உயர்திரு A. K. சீதாராமன், இந்து உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், உயர்திரு T. S. ராஜகோபாலன், ராஜா முத்தையா உயர் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் உயர் திரு அருணஜடை, ராஜா முத்தையா உயர்நிலைப் (பெண்கள்) பள்ளித்தலைமையாசிரியை சீமாட்டி ஸரஸ்வதி ஸ்ரீநிவாசன் இவர்கள் பங்குகொண்டனர், மெஸ்டன் ஆசிரியர் கல்லூரிக் கணக்குப் பேராசிரியர் உயர்திரு விக்டர் இக் கருத் தரங்கினைத் துவக்கி வைத்தார்; தென்சென்னை மாவட்டக் கல்வியதிகாரி, உயர்திரு ஐசக் ஆல்பர்ட் அவர்கள் இக்கருத்தரங்கின் இறுதி நிகழ்ச்சியை நடத்தினுர். மெஸ்டன் கல்லூரி முதல்வர் உயர்திரு சிரஞ்சீவி ஆசிரிய ஆசிரியைகட்குப் பயிற்சி பெற்றதற்காகப் பத்திரம் வழங்கினுர்; Coordinator உயர் திரு தேவசகாயம் நன்றி நவின்றுர். இத்தகைய கருத்தரங்குகள் பல இடங் களிலே அவசியம் நிகழவேண்டும்.

தமிழாசிரியர்களின் வேலைப்பளுவைப் பற்றிய அறிக்கை

(8-2-1963 அன்று நடைபெற்ற பெரியகுளம் வட்டத் தமிழாசிரியர் மன்றச் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது)

உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்களின் வேலைப் பளுவைப் பற்றிய, மிக வருந்தத் தக்கதும் ஆனால் பலராலும் நன்கு உணரப்படாததும் நன்கு எடுத்துக்காட்டப்படாததும் ஆன அவல நிலையை இம்மன்றம் அனைவரது கவனத்துக்கும் கொண்டு வந்து நிவர்த்தி காண விழைகின்றது.

சென்னைக் கல்வி விதிகளின்படி (M.E.R.) B.T. ஆசிரியர்களும், Sec. Gr. ஆசிரியர்களும் வகுப்பாசிரியர்கள் என்று தனியாகவும், பிற ஆசிரியர்கள் என்று தனியாகவும் பிரிக்கப்டுகிறார்கள். தமிழாசிரியர்கள் இரண்டாவது பிரிவில் அடங்கியவர்கள். வகுப்பாசிரியர்களுக்குக் குறைந்த பட்ச வேலைநேரம் வாரத்துக்கு 17 மணியாகும். தமிழாசிரியர்களுக்கு 17 மணி நேரத்திற்குமேல் இருக்கவேண்டிய கட்டாயம் இல்லை. ஆனால், நடைமுறையில் அவர்களுடைய வேலை 17 மணி நேரத்துக்கு அதிகமாகவே இருக்கின்றதன்றிக் குறைவதில்லை.

ஒரு பள்ளியில் ஒவ்வொரு கிரேடிலும் ஒருவருக்குமேல் தமிழாசிரியர் நியமிக்க வேண்டுமென்றால் முதல்வருக்கு 17 மணி நேர வேலை போக மேலும் 8 மணி நேர வேலை எஞ்சியிருந்தால் மூன்றாமவர் நியமிக்கப்படலாம் என்று அரசாங்க உத்தரவுகள் சொல்லுகின்றன. (உயர் வகுப்புகளில் 25 மணி நேரமும் கீழ் வகுப்புகளில் 25 மணி நேரமும் தமிழ்ப் பாட வேலைகள் இருந்தால் முதல் கிரேடு தமிழாசிரியர் இருவர், இரண்டாவது கிரேடு தமிழாசிரியர் இருவர்). இவ்வுத்தரவுகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் தமிழாசிரியர்களுக்குக் குறைந்த பட்சம் 17 மணி நேர வேலை இருக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருப்பதாக யாவராலும் கருதப்பட்டு வருகிறது. ஆகையால் அவர்களுடைய வேலை நேரம் 17 மணி நேரத்திற்கு அதிகமாகவே இருந்துவருகிறது.

வகுப்பாசிரியர்களுக்கு 17 மணி நேரம் குறைந்த பட்சமாக விதிக்கப்பட்டிருந்தாலும் பிற விதிகள் அவர்களுடைய வேலை குறிப்பிட்ட அளவுக்குமேற் போகாமல் பாதுகாக்கின்றன. எத்தனை வகுப்புகள் இருக்கின்றனவோ அத்தனை வகுப்பாசிரியர்கள் (தலைமையாசிரியர் தவிர) நியமிக்கப்படவேண்டும் என்றும், பிற ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ளும் பாட நேரம் போக வகுப்பாசிரியர்களுக்கு எஞ்சுகின்ற நேரம் 17 மணிக்குக் குறைந்தால் 2 மணி வரை குறைவு அனுமதிக்கப்படும் என்றும் சென்னைக் கல்வி விதி (Rule 47, M. E. R.) கூறுகிறது. தமிழ், ஹிந்தி, உடற்பயிற்சி, நீதி போதனை, குடிமைப் பயிற்சி, கலை இவற்றுக்குரிய பாடவேளைகளைக் கழித்து விட்டால் ஒரு வகுப்புக்குச் சுமார் 20 பாட வேளைகள் (periods) எஞ்சும். (அவ்வப்போது பாடத்திட்டத்தில் ஏற்படும் மாற்றங்களை யொட்டி ஒரு பாடவேளை கூடும் அல்லது குறையும்) ஆகவே வகுப்பாசிரியர்களுக்கு சராசரி 14½ மணி நேரமே கிடைக்கும். இதிலும் தலைமையாசிரியர் சுமார் 10 பாடவேளைகள் எடுத்

துக்கொள்ளுவார். குடிமைப் பயிற்சி, நீதி போதனை இவற்றைச் சேர்த்தும், ஒரே வகுப்பிலுள்ள மாணவர்களைப் பொதுக் கணிதம் கற்பவர்கள், கலவைக் கணிதம் கற்பவர்கள் (General Mathematics & Composite Mathematics) என்று பிரிப்பதின் விளைவாக ஏற்படுகின்ற அதிகப் பாடவேளைகளைச் சேர்த்தும், உடற்பயிற்சி, கலை முதலிய பாடங்களின் நேரத்தைக் குறைத்து ஆங்கிலம் முதலியவற்றுக்கு அதிகப் பாடவேளைகள் அளித்தும் B.T. ஆசிரியர்களது வேலை நேரம் சரிக்கட்டப் படுகிறது. நீதி போதனை, குடிமைப் பயிற்சி ஆகியவற்றைச் சேர்த்தும், மேலே கூறியபடி ஆங்கிலம் முதலியவற்றுக்குப் பாடவேளைகளை அதிகமாக்கியும் தமிழ்ப் பாடத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தும் Sec. Gr. ஆசிரியர்களது வேலை நேரம் சரிக்கட்டப்படுகிறது. தமிழ் ஆசிரியர்களது நிலை இதற்கு மாறானது.

இத்தனை வகுப்புகளுக்கு இத்தனை B.T. அல்லது Sec. Gr. ஆசிரியர்கள் இருக்க வேண்டுமெனவும், இத்தனை மாணவர்களுக்கு இத்தனை உடற்பயிற்சி ஆசிரியர்கள் இருக்க வேண்டுமெனவும் விதிகள் இருப்பது போலத் தமிழாசிரியர்கள் நியமனத்துக்கு விதி இல்லை. உயர் வகுப்புகளில் தமிழ்ப் பாடம் தமிழாசிரியர்களாலேயே கற்பிக்கப்படுகிறது. கீழ் வகுப்புகளிலும் தமிழாசிரியர்களாலேயே தமிழ்ப் பாடம் கற்பிக்கப்படவேண்டும் என உத்தரவு இருந்தும், அவ்வுத்தரவு திரும்பத் திரும்ப அனைவருக்கும் நினைவுறுத்தப்பட்டும் பெரும்பாலும் கீழ் வகுப்புகளில் Sec. Gr. ஆசிரியர்கள் தமிழ் கற்பிக்கிறார்கள். தமிழாசிரியர்களின் வேலை நேரம் அதிகரிப்பதற்கு இது முக்கியமான காரணம் ஆகிறது.

புதிதாகத் தொடங்கிய உயர்நிலைப் பள்ளியொன்றில் உயர் வகுப்புகள் மூன்று இருக்கின்றனவென்றால் 18 தமிழ்ப் பாட வேளைகள் இருக்கும். தமிழாசிரியருக்கு இந்த 18 பாட வேளைகளுடன் கீழ் வகுப்பில் 8 பாடவேளை அளிக்கப்படும். உயர் வகுப்புகள் நான்கு ஆகும்போது அவருக்கு உயர் வகுப்பிலேயே 24 பாடவேளைகள் ஆகும். உயர் வகுப்புகள் ஐந்து ஆகும்போது அவருக்கு 30 பாடவேளை ஆனாலும் ஆகும்; அல்லது இன்னொரு தமிழாசிரியர் நியமிக்கப்பட்டு அவருக்கு 6 பாடவேளை உயர் வகுப்பிலும் எஞ்சிய நேரம் கீழ் வகுப்புகளிலும் வேலை அளிக்கப்படும். உயர்வகுப்புகளில் தமிழாசிரியருடைய வேலை கொஞ்சம் லகுவாகும்போது அவருக்குக் கீழ்வகுப்பிலும் வேலை அளித்து Sec. Gr. ஆசிரியர்கள் தமிழ் கற்பிக்கும் நேரம் குறைக்கப்படுகிறது. மேல் வகுப்பில் தமிழாசிரியருக்கு வேலை அதிகரிக்கும்போது கீழ் வகுப்பில் அவர் கைவிடுகின்ற நேரத்தை Sec. Gr. ஆசிரியர்கள் நிரப்பிவிடுகிறார்கள். முன்பு தமிழுக்கு வாரத்துக்கு 7 பாட வேளை இருந்த போது ஒரு தமிழ் ஆசிரியருக்கு 4 வகுப்பு—அதாவது 28 பாடவேளை இருந்தது. இப்போது தமிழுக்கு 6 பாடவேளைகள். ஆகையால் தமிழாசிரியர்களுக்கு 24 பாடவேளைகள் அல்லது 30 பாடவேளைகள் ஆகின்றன. எப்படியானாலும் தமிழாசிரியருக்கு 17 மணி நேரத்துக்கு அதிகமாக வேலை ஏற்படுவதற்கு வழியுண்டு; குறைவதற்கு வழியில்லை. மேல் வகுப்புகளில் முதல் நிலைத் தமிழாசிரியர்களுக்குச் சாத்தியமான அளவு அதிக வேலை கொடுத்துவிட்டு எஞ்சிய வேலையை இரண்டாவது கிரேடு தமிழாசிரியர் ஒருவருக்கு அளிக்கவும், கீழ் வகுப்புகளில் தமிழாசியர்களுக்குச் சாத்தியமான அளவு அதிக வேலை கொடுத்தபின்

எஞ்சிய வேலையைச் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ளவும் வசதி இருக்கிறது. அதாவது அதிகப் படியாக ஒரு முதல் கிரேடு தமிழாசிரி யரை நியமித்து அவருக்கு அளிக்கப்பட வேண்டிய வேலை, இருக்கிற முதல் கிரேடு தமிழாசிரியர்களுக்கு வேலையைச் சற்று அதிகமாக்கியும் மீதி வேலையை இரண்டாவது கிரேடு தமிழாசிரியருக்கு அளித்தும் சரிக்கட்டப்படுகிறது. அதிகப் படியாக ஒரு இரண்டாவது கிரேடு தமிழாசிரியரை நியமித்து அவருக்கு அளிக்கப்படவேண்டிய வேலை, இருக் கிறவர்களுடைய வேலையைச் சற்று அதிகமாக்கியும் மீதியை Sec. Gr. ஆசிரி யர்களுக்கு அளித்தும் சரிக்கட்டப்படுகி றது. இறுதியில் Sec. Gr. ஆசிரியர்கள் சமயத்துக்கேற்றாற்போல் நெகிழ்ந்து கொடுப்பவர்களாக (Buffer) இருக்கி றார்கள். இந்நிலை இருக்கும் வரை தமிழாசிரியர்களின் வேலைப் பளு அதிக மாகவே இருக்கும்.

இங்ஙனம், கற்பிக்கும் வேலை அதிக மாக இருப்பதோடு திருத்தும் வேலையும் (correction & valuation) அதிகமாக இருக்கிறது. முதலில் கட்டுரையை எடுத்துக் கொள்ளலாம். B. T., Sec. Gr. ஆசிரியர்கள் (ஓரிரு விதிவிலக்குகள் தவிர) ஒரேயொரு வகுப்புக்கு ஆங்கிலக் கட்டுரையும் மொழி பெயர்ப்பும் திருத்து கிறார்கள். ஒவ்வொன்றிலும் மாதத் துக்கு இரண்டு பயிற்சிகள் கொடுப்பதாக வைத்துக்கொள்ளுவோம், இரண்டு மொழி பெயர்ப்புப் பயிற்சிகளை ஒரு கட்டுரைப் பயிற்சிக்குச் சமமாகக் கொண் டால் மாதம் மூன்று பயிற்சிகள் திருத்து வதாகிறது. (ஒரு வகுப்புக்கு 50 மாண வர்களென்றால் 150 சுவடிகள் திருத்த வேண்டும்). ஒரு தமிழாசிரியர் 4 வகுப் புக்குப் பாடம் கற்பிப்பதாக வைத்துக் கொண்டால் வகுப்புக்கு மாதம் ஒன்றுக்கு 2 பயிற்சிகள் வீதம் 8 பயிற்சிகள் திருத்த வேண்டும். (வகுப்புக்கு 50 மாணவர் கள் என்றால் 400 சுவடிகள் ஆகின்றன) 5 வகுப்புகளுக்குக் கற்பிப்பதாயின் 10 பயிற்சிகள் திருத்தவேண்டும். இப்படி அதிக வேலையுள்ள இடங்களில் ஒரு சில அருள்படைத்த தலைமை ஆசிரியர்கள் பயிற்சிகளின் எண்ணிக்கையைக் குறைத்துத் தமிழாசிரியர்களின் வேலைப் பளுவைக் குறைக்கிறார்கள். ஆயினும் தலைமை ஆசிரியரின் விருப்பு வெறுப்பு களைப் பொறுத்த விஷயமாக இருக்கும் வரை இந்நிலைமைபற்றித் திருப்தியடை வதற்கில்லை.

அடுத்து, தேர்வு விடைத்தாள்கள் திருத்தும் வேலையைப் பார்ப்போம். ஆங் கிலம் 7 பாடவேளைகள் (மொழிபெயர்ப்பு உட்பட) கற்பிக்கப்படுகிறது. அதில் வினாத்தாள் 2 ; கணக்கு 5 பாடவேளை ; வினாத்தாள் ஒன்று. மற்றவை நான்கு பாட வேளைக்கு ஒரு வினாத்தாள். மொத் தம் 20 பாடவேளைக்கு 5 விடைத்தாள் வருகிறது. அநேகமாக எல்லா வகுப்பு ஆசிரியர்களும் ஆங்கிலம் கற்பிக்கிறார் கள். ஆக அவர்களுக்கு 4 பாடவேளைக்கு ஒரு விடைத்தாள் (ஒரு பாடத்தில் ஒரு வகுப்புக்குரிய விடைத்தாள்கள்) வீதம் வருகிறது. தமிழுக்கு உயர்வகுப்புகளில் ஆறு பாடவேளைகள் ; 2 வினாத்தாள். 3 பாட வேளைக்கு ஒரு வகுப்பு விடைத் தாள்கள் (மிகப் பல தலைமை ஆசிரியர் கள் கீழ் வகுப்புகளிலும் தமிழுக்கு 6 அல்லது 7 பாடவேளைகள்தாம் அளிக் கிறார்கள்). உயர் வகுப்புகள் 4 உள்ள ஒரு பள்ளியில் வகுப்புக்கு 50 மாணவர் கள் என்று வைத்துக்கொண்டால் அந்த 200 மாணவர்களுக்கும் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூக நூல் ஆகி யவற்றில் மொத்த விடைத்தாள் 1000

ஆகிறது. ஒவ்வொரு B. T. ஆசிரியருக்கும் 250 விடைத்தாள் (தலைமை ஆசிரியர் கொஞ்சம் விடைத்தாள் எடுத்துக்கொள்ளும்போது இன்னும் குறையும்). நான்கு வகுப்புக்கும் தமிழாசிரியர் ஒருவர்தான். அவர் மதிப்பிடவேண்டிய தமிழ் விடைத்தாள் மொத்தம் 400. மொழி விடைத்தாள்—அதிலும் தமிழ் விடைத்தாள்—ஒவ்வொன்றும் திருத்துவதற்கு அதிக நேரம் ஆகும் என்பது அனைவரும் அறிந்ததே.

இவ்விதமாக, தமிழாசிரியர் பாடம் கற்பிக்கும் நேரம் அதிகம்; திருத்தும் வேலை அதைவிட அதிகம்; விடைத்தாள் மதிப்பிடும் வேலை மிகமிக அதிகம்.

கீழ்க்கண்ட வழிகளைக் கைக்கொண்டால் மேற்சொல்லப்பட்ட குறைகள் தீங்குவதற்கும், அதன் பயனாகத் தமிழாசிரியர்கள் ஊக்கத்துடன் உழைப்பதற்கும், தமிழ்க் கல்வியின் தரம் உயர்வதற்கும் ஏதுவாக இருக்கும்.

(1) உயர் வகுப்புகளுக்கும் கீழ் வகுப்புகளுக்கும் தனித்தனியாக இத்தனை வகுப்புக்கு இத்தனைத் தமிழாசிரியர் எனத் தமிழாசிரியர்களின் எண்ணிக்கைக்குக் குறைந்தபட்ச அளவு விதித்தல்.

(2) கீழ் வகுப்புகளுக்குத் தமிழாசிரியர்களே தமிழ்ப் பாடம் கற்பிக்க வேண்டும் என்பதைக் கண்டிப் பாக்குவதோடு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் தமிழ்ப் பாடம் கற்பிக்க நேரிட்டால் ஒவ்வோராண்டும் ஒவ்வோராசிரியருக்கும் தனித் தனியாகக் கல்வியிலாகாவின் முன் அனுமதிபெற்றே அவ்விதம் செய்யவேண்டும் என உத்தரவிடுதல்.

அரசியலாரும், கல்வித்துறை அதிகாரிகளும் மாநிலத் தமிழாசிரியர் கழகமும், தென்னிந்தியா ஆசிரியர் சங்கமும் சட்டமன்ற ஆசிரியப் பிரதிநிதிகளும் அருள் கூர்ந்து இவற்றை ஆழ்ந்து பரிசீலித்துக் குறைகளைய முயலவேண்டுமென்று இம்மன்றம் வேண்டுகின்றது.

54-வது கும்பகோணம் இராஜ்ஜியக் கல்வி மகாநாடு

இவ்வாண்டு மே மாதம் கும்பகோணத்தில் மகாநாடு நடக்க இருக்கிறது. பிரதிநிதியாக வர விரும்புகிறவர் ஒவ்வொருவரும் ரூபாய் ஒன்று பிரதிநிதிக் கட்டணம் (Delegate Fee) செலுத்தல் வேண்டும். மகா நாட்டைப் பற்றிய மற்ற விவரங்கள் எல்லாம் தொடர்ந்து இந்தப் பத்திரிகையில் வெளி வரும்.

கல்வி என்னும் விளக்கு

உணவு, உடை, உறையுள் - இவை மட்டுமல்ல; கல்வியும் இப்போது ஆதார வசதிகளில் ஒன்றாகி விட்டது. சமுதாயம் முன்னேறுகிறது என்பதற்கு இது ஒரு சாட்சி.

ஐந்தாண்டுத் திட்டங்கள் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவை. கடந்த பன்னிரு ஆண்டுகளில் தமிழகக் கல்வி நிலையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் காண்பீர்!

	1951	1961	1963
ஆரம்பப் பள்ளிகள்	16,000	27,000	30,463
உயர்நிலைப் பள்ளிகள்	637	1361	1,765
கலைக் கல்லூரிகள்	28	56	69
மருத்துவக் கல்லூரிகள்	3	5	6

இதிலும் ஒரு முதலிடம்

மாணவர்களின் செவிக்கு மட்டுமன்றி, வயிற்றுக்கும் உணவு அளிக்கப்படுகிறது. ஆம்; நமது இலவச நண்பகல் உணவுத் திட்டத்தைக் கண்டு இந்தியா முழுவதும் வியக்கிறது. மாணவர்க்கு நிகராடை வழங்கும் பணியிலும் தமிழகம் நிகரற்ற இடத்தை அடைந்துள்ளது.

கல்வி ஒரு விளக்கு - எல்லா உள்ளங்களிலும் அதை ஏற்றி வைப்போம்:

(தமிழ்நாடு அரசாங்கச் செய்தித் துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது)

ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை

தமிழ்க் கட்டுரைப் பயிற்சிகள்

By Sri C. Ekambara Iyer, Tamil Pandit, P. S. High School

முதல் வகுப்பில் மாணவர்கள் எழுத்துக்களை எழுதவும், சில எழுத்துக்களாலான சொற்களை எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டிருப்பார்கள். மேலும் அவர்கள் இரண்டு மூன்று சொற்களாலான வாக்கியங்களை உண்டாக்கி எழுதவும் படிக்கவும் அறிந்திருப்பார்கள். அவர்களுக்குப் பின் வரும் பயிற்சிகளைத் தரலாம். சிறு அட்டைத் துண்டுகளில் தனிக் குறில், தனி நெடில், ஒற்றடுத்த தனிக்குறில் ஒற்றடுத்த தனி நெடில்கள், இரண்டு குறில்கள், அவை ஒற்றடுத்து வருதல், ஒரு குறிலும் ஒரு நெடிலும், அவை ஒற்றடுத்துவருதல் கொண்ட எழுத்துக்களை எழுதித் தருவோம்; அவற்றின் துணையால் பலவேறு வார்த்தைகளை உண்டாக்கச் செய்வோம்.

உதாரணம் :

கப் பல், வண் டி, பாம் பு, சம் ப ளம், பட் டணம், எரு மை, படுக் கை, கோ புரம்

இவை எழுதப்பட்ட எழுத்து அட்டைகளைச் சேர்த்ததால் கப்பல், வண்டி, பாம்பு, சம்பளம், பட்டணம், எருமை, படுக்கை, கோபுரம் என்னும் வார்த்தைகள் உண்டாயின.

பயிற்சி :

பின்வருவனவற்றுள் கூட்டல் குறியை எடுத்துவிட்டுச் சேர்த்துப் பின் அவற்றைப் படிக்கவும்.

காக் + கை, கடி + கா + ரம், காட் + டு, பருப் + பு, கோ + துமை, சாப் + பா + டு.

கீழ்க்காணும் வார்த்தைகளைச் சேர்த்துப் படித்துப் பின் எழுதச் செய்யவும்:

கல் + யானை, இங்கே + வா. பதில் + சொல், பாடம் + படி, காரியம் + செய், கெட்ட + பையன், பழம் + தின்.

பயிற்சி :

முதல் வரிசையில் கண்ட வார்த்தைகளுக்குச் சரியான வார்த்தைகள் இரண்டாவது வரிசையில் உள்ளன : அதை அதைச் சேர்த்து எழுது பார்ப்போம்.

(முதல் வரிசை) வண்டி, பறவை, மனிதன், மாடு, கழுதை.

(இரண்டாவது வரிசை) உதைக்கிறது, கொட்டுகிறது, பறக்கிறது, ஓடுகிறது, வருகிறான்.

இரண்டாவது வகுப்பில் மாணவர்கள் சிறு வாக்கியங்களை எழுதவும் படிக்கவும் பழகியிருப்பார்கள். கொடுத்த ஒரு பொருளைக் குறித்து ஐந்தாறு வாக்கியங்கள் எழுதச் செய்யலாம்.

உதாரணம் : பசு.

பசு ஒரு பிராணி.
அதற்குக் கால்கள் நான்கு.
அது கொம்புகளால் முட்டும்.
அது புல் தின்னும்.
அது பால் தரும்.
பால் சுவை உள்ளது.

பயிற்சி :

பின்வரும் பொருள்கள் ஒவ்வொன்றையும் குறித்து ஐந்து வாக்கியங்கள் எழுதவும்.

குதிரை, கழுதை, புத்தகம், தோட்டம், குளம், வீடு.

பயிற்சி :

பின் வருவனவற்றுள் முன் பின்னுக மாறியிருக்கும் வார்த்தைகளைச் சரிப் படுத்தி வாக்கியங்கள் எழுதவும் :

1. படிக்கிறுன் கோபாலன் புத்தகம்.
2. வளர்கிறது உயரமாக செடி.
3. கொட்டுகிறது தண்ணீர் குழாயில்.
4. சொல்வேன் தடவை உனக்கு எத்தனை.
5. முட்டை ஒரு இது.

மூன்ருவது வகுப்பில் மாணவர்களைக் குறித்த விஷயங்களைப் பற்றிப் பத்துப் பன்னிரண்டு வாக்கியங்கள் எழுதச் செய்யலாம்.

உதாரணம் : வாழைமரம்.

வாழை மரம் பெரிதாய் வளரும்.

அது குலை தள்ளும்.

குலையின் அடியில் காய்களும் நுனியில் பூவும் இருக்கும்.

வாழைப் பழம் ருசியாக இருக்கும்.

அடிமரத்தில் பட்டையும் தண்டும் உள் ளன.

வாழைப் பிஞ்சு துவர்க்கும், பழம் இனிக்கும்.

காயும், பூவும், தண்டும் சமைத்து உண்ண உதவும்.

வாழையிலை நீண்டும் அகன்றும் உள் ளது.

வாழைப் பட்டையில் நார் உரிக்க லாம்.

நார் பூக்கள் தொடுக்க உதவும்.

பெரிய வாழை மரத்தின் கீழே கன்று கள் முளைக்கும்.

வாழைக் கன்றைக் கிழங்கோடு நட் டால் வளரும்.

பயிற்சி :

பின்வரும் ஒவ்வொரு பொருளையும் பற்றிப் பத்துப் பன்னிரண்டு வாக்கியங் கள் எழுதவும்.

(1) நமது பள்ளிக்கூடம் (2) ஊர்க் குளம் (3) காய் கறிக்கடை (4) கடல் கரை.

நான்காவது வகுப்பில் மாணவர்களை, அவர்கள் படித்த கதையை அல்லது முக் கிய நிகழ்ச்சியைச் சுருக்கி எழுதும்படி சொல்லலாம்.

உதாரணம் :

தாயின் சொல் மீறிய எலியின் கதை

ஒரு வீட்டில் எலிகள் பல வசித்திருந் தன. அவை இரவில் எவரையும் தூங்க விடுவதில்லை. பண்டங்கள் அதிகமாய் நாசம் அடைந்தன. எலிகளைப் பிடிக்க ஒரு பொறி கொண்டுவந்தார்கள். அதில் கொக்கியில் ஒரு தேங்காய் பில்லை செருகி வைத்தார்கள்.

அங்கும் இங்கும் ஓடிய எலிகள் பொறி யையும் தேங்காய் பில்லையையும் பார்த் தன. பொறியை வீடென்றும், தேங்காய் தமக்கென்று வைக்கப்பட்டிருக்கும் உணவு என்றும் எண்ணின. இந்தச் செய்தியைத் தம் தாயிடம் சென்று தெரி வித்தன. எல்லாம் தெரிந்த தாய் எலி அவற்றிடம் அப்பொறி தம்மைப் பிடிக்க வைத்திருப்பதாகவும் அங்குச் செல்லலா காது என்றும் தெரிவித்தது.

ஒரு சிறிய எலி மட்டும் தாயின் சொல் லைக் கேட்கவில்லை. சந்தடியில்லாத

(*Continuation on 3rd cover page.*)

எகோ (ECHO)

(Education Echo-வின் ஜனவரி வெளியீடு)

ASIAN MEETING EXPLORES 1964 THEME IN

பாங்காக் நகரில் நடைபெறும் ஆசிய மகாநாட்டில் 1964-ஆம் ஆண்டுத்திட்டம் நன்கு ஆராயப்படும்.

பிப்ரவரி 16-22-இல் தாய்லாந்து நாட்டில் பாங்காக் நகரில் நிகழும் WCOTP ஆசியப்பிரதேசமகாநாட்டிற்கு, 17 ஆசியபஸிபிக்நாடுகளிலிருந்து 200 பிரதிநிதிகளுக்குமேல் வருவர் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. "ஐ. நா. ஸ்தாபனத்தைப்பற்றிக் கல்விமூலம் ஸர்வதேசவறிவை வளர்த்தல்"-என்னும் WCOTP-யின் 1963-64 ஆண்டுத்திட்டத்தை ஆராய்வதிலேயே அம் மகாநாடு தன் கருத்தைச் செலுத்தும்.

அம் மகாநாட்டில் ஆசியாவிற்கு ஐ. நா.வின் முக்கியத்தைப்பற்றி ஆசியப்பெரியோர் மூவர் விரிவுரைநிகழ்த்துவர். அம் மூவரும் ஐ. நா. மகாசபையின் தலைவராய்த் தொண்டாற்றியவர்கள். Dr. கார்லோஸ் பி. ரோமுலோ ஃபிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத் தலைவர்; இளவரசர் வான் வெலட்ஷயா தோரன், தாய்லாந்து உதவிப்பிரதமர்; மஹமது ஸஃப்ருல்லாகான், சர்வதேசநீதிமன்றத்தின் நீதிபதி. இம் மூவரன்றியும், UNESCO-வினேடு தொடர்புள்ள ஆசியநாடுகளின் தேசியக்கமிஷன்களின் பிரதிநிதிகளும் இம் மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்ளப்படுவர். 'பாங்காக்' நகரில் UNESCO மகாநாடு முடிந்தவுடனேயே WCOTP-மகாநாடு தொடங்கும்.

பிப்ரவரி 16-17-இல், 'தாய்லாந்துகல்விச்சங்கமும்', 'தனியார் பள்ளிக்கூட ஆசிரியர்சங்கமும், தாய்லாந்தின் பண்பாட்டாராய்ச்சியைப்பற்றிய திட்டமொன்றனைத் தொடங்கிவைக்கும். அத் திட்டத்தின்கீழ்ச் சொற்பொழிவுகள்பல நிகழ்த்தப்பெறும்; பல முக்கிய இடங்களுக்குச் செல்வர்; அனுபவத்திற் கண்ட பல உண்மைகள் பயிற்சிகள்-மூலம் உணர்த்தப்படும். அம் மகாநாட்டுத்திட்டம் பிப்ரவரி 18-இல் 'தாய்' அரசாங்கப்

பிரதிநிதி வாசித்தளிக்கும் வரவேற்புரையோடு தொடங்கும். WCOTP-யின் தலைவர், ஸர். ரோனல்டு கௌல்டு பெரும்புகழ்பெற்ற அப் பிரஸங்கிகளை அறிமுகஞ்செய்துவைப்பார். அன்று மாலையில் தாய்லாந்து அரசாங்கம் அம் மகாநாட்டுப்பிரதிநிதிகளுக்கு விருந்துவைத்து வரவேற்று உபசரிக்கும்.



அம் மகாநாடு கூடுங் கூடம்

"ஐ.நா. ஸ்தாபனம் கல்வித்துறைக்குச் செய்யுந் தொண்டு"—என்பது அம் மகாநாட்டின் இரண்டாம் நாளில் ஆராயப்படும் விஷயம். அப்போது பலர் பிரஸங்கம்செய்வர்; பலர் ஆராய்ச்சிக்கட்டுரைகளை வாசிப்பர். அம் மகாநாட்டில் பிரஸங்கம்செய்ய விரும்புவோர், தங்கள் ஆராய்ச்சிக்கட்டுரையின் சுருக்கத்தை 500 வார்த்தைகளில் எழுதி, தங்கள் தேசீய சங்கங்களுக்கு அனுப்புதல்வேண்டும். தனிக்கமிட்டியொன்று அவற்றை ஆராய்ந்து தேர்ந்தெடுக்கும். இப் போட்டியில் மகாநாட்டுப்பிரதிநிதிகள்யாவரும் கலந்துகொள்ளலாம்.

பிப்ரவரி 20-22-இல், "கல்வித்துறை, ஐ. நா. ஸ்தாபனத்துக்கும் அதன் பகுதிகளாகிய தனிச்சிறப்பு வாய்ந்த 'ஏஜென்ஸி'களுக்கும் செய்யுந் தொண்டு' என்பதைப் பற்றிய திட்டங்கள் வெளியிடப்படும். ஆங்கு FAD, UNICEF, Unesco, ECAFE, WHO என்பவற்றைப்பற்றித் தனித்தனிக் கூட்டங்கள் நடைபெறும். ஒவ்வொரு நாளும் நான்கு பகுதிகளாய்ப் பிரிக்கப்படும்; இரு கூட்டங்கள் நடைபெறும்.

மகாநாட்டிற்கு வருவோர் மூன்று பகுதிகளாகப் பிரிவர். ஒவ்வொரு பகுதிக்கும் கூட்டத்திற்கென்று மூன்று பிரிவுக்காலமும், ஓய்வுக்கென்று ஒன்றும் உண்டு. முதற்காலப்பிரிவில் தேர்ந்தெடுத்த வேலையை விளக்கும் இடத்திற்குச் சென்று காண்பர். இரண்டாவது காலப்பிரிவில் ஆங்குக் கண்டவற்றுள் உள்ள கல்விச்சிக்கல்களைப்பற்றி ஐ. நா. ஏஜென்ஸியறிஞர் எடுத்துக்கூறுவர். இறுதியாக, ஆசிரியஅறிஞர்களின் கருத்தரங்கும், கல்விக்குரிய சிறப்புக்களைப்பற்றிப் பிரதிநிதிகளின் ஆராய்ச்சியும் நடைபெறும். அச் சிக்கல்களை அறுக்க அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இறுதிநாளில், WCOTP-யின் உபதலைவரான ஸ்ரீ. எஸ். நடராஜன் அவர்கள் "ஐ. நா. ஸ்தாபனத்தைப்பற்றிய அறிவினைக் கல்விமூலம் ஸர்வதேசங்களிலும் வளர்த்தல்"-என்னும் WCOTP-யின் 1964ஆண்டுத்திட்டத்தை ஸமர்ப்பிப்பார். அதன்பின்னர் ஆசிரியர்ஸங்கங்கள் அவ் விஷயத்தை ஆதரித்து ஆராய்வர். அவர்கள் கண்ட முடிவுகள், பாரிஸில் நடைபெறவிருக்கும் WCOTP 1964-பிரதிநிதிகள் மகாநாட்டிற்கு அனுப்பப்படும்.

நவம்பரில் 'ஸான் ஜுவான்' (பூர்டோ ரிகோ) நகரில் நடைபெற்ற
WCOTP கருத்தரங்கில் கலந்துகொண்ட அறிஞர்.

லத்தீன்அமெரிக்கஅறிஞர் ஆசிரியர்நலத்தைப்பற்றி விவாதித்தல்

தென்னமெரிக்கா, மத்திய அமெரிக்கா என்னும் இருநாடுகளிலிருந்து வந்த ஆசிரியத்தலைவர்கள் 'ஸான் ஜுவான்' நகரில் நவம்பர் 17-30இல் நடைபெற்ற-ஆசிரியத்தொழிலைப்பற்றிய-WCOTP கருத்தரங்கில், ஆசிரியர்களின் நலனைப்பற்றி ஆராய்தற்கு இரண்டுவாரகாலம் செலவிட்டனர். லத்தீன்அமெரிக்கநாடுகளிலுள்ள 11 ஆசிரியர்சங்கங்களிலிருந்து வந்த அறிஞர் இம் மகாநாட்டில் பங்கெடுத்துக்கொண்டனர். WCOTP காரியாலயத்தைச் சேர்ந்த ஜோஸ் ஜோக்வீன் ரிவேரா அம் மகாநாட்டின் 'டைரக்ட'ராகத் தொண்டாற்றினர்.

அக் கருத்தரங்கில் ஆராய்ந்த விஷயங்கள் : ஆசிரியர்போதனுமுறைப்பயிற்சியும் தகுதிப்பத்திரம்அளித்தலும் ; பழகுந் தரமும் ஒழுக்கத்திட்டமும் ; தொழிற்றுறைத்-தொடர்புகள் ; ஆசிரியர்களின் மதிப்பை அறிதலும், அவர்களைப் பல பகுப்புக்களாகப் பிரித்தலும், அவர்களின் ஊதியமும் ; போக்குவரவுசாதனம் ; கல்விபற்றிய சட்டக்-கொள்கையின் முன்னேற்றம் ; சுகாதாரத்திட்டங்கள் ; ஆசிரியர்கள் முதுமைகாரண-மாக வேலையினின்று விலகுதலும், அவர்களின் 'பென்ஷ'னும் ; வீடுகட்டிக் கொடுக்குந் திட்டங்கள் ; ஆசிரியத்தொழிலுக்கு உதவிசெய்யுஞ் சங்கங்கள்.

WCOTP ஸெக்ரடரி-ஜனரலான வில்லியம் G. கார், அக் கருத்தரங்கினைத் தொடங்கிவைக்கும்போது, பின்வருமாறு பேசினர் : "அமெரிக்கநாடுகளிலும் உலகத்தின் பிறபகுதிகளிலும் உள்ள ஆசிரியர்நிலையை உயர்த்துதற்கு நாமனைவரும் ஒன்றுகூடி முயற்சிசெய்வதற்கு, இம் மகாநாட்டுத்திட்டம் நமக்கு மிகச்சிறந்த வாய்ப்பினை அளிக்கின்றது. ஆசிரியர்நிலை உயர்த்தப்படுதல்வேண்டும். ஆசிரியர்களுக்குச் செய்யும் உதவிகளை மிகுதியாக்கல்வேண்டும். காலத்துக்கேற்ற கல்வியையே அளித்தல் வேண்டும். ஆசிரியர்களின் பொருளாதாரசமூகவளர்ச்சி அதிகப்படுதல் வேண்டும். யாரால்? நிச்சயமாகச் சமூகம் முழுதும் அத் தொண்டினைச் செய்தல்வேண்டும். ஆயின், நம்மை நாமே உயர்த்திக்கொள்ளுதல்வேண்டும் என்பது முதற்கடமை. இதற்கு மனவுறுதிமட்டும் போதாது ; தொழிற்றிறமைகளையும் பெறுதல் வேண்டும் ; வளர்த்தல்

வேண்டும். தனித்தனியே முயன்று விடுவிக்கமுடியாத சிக்கல்களை நாமனைவரும் ஒன்றுபட்டு விடுத்து வெற்றிபெறலாம். இதற்கு உலகத்திலுள்ள பல கண்டங்களிலுள்-

ளோரனைவரும் கொள்ளுங் கூட்டுறவும் ஒற்றுமையும் நன்கு பயன்படும். அறிவையும் அனுபவத்தையும் பரிமாறிக்கொள்ளுதல், வாழ்க்கையிலுள்ள சிக்கல்களைப்பற்றி ஒன்றுகூடி ஆராய்தல், முறைகளையும் சிறப்புப்பகுதிகளையும் ஒன்றுகூடி ஆராய்ச்சிசெய்தல் ஆகியவற்றின்மூலம், கல்விவளர்ச்சியைப் பெருக்குதற்கு நம் சங்கங்களுக்குள்ள பேராற்றலை முன்னிலும் அதிக அளவில் நன்கு உணரலாம்.

ஆசியா :

இடம் : A. ஸாக்கரி, செக்ரடரி-ஜனரல், இந்தோனேஷியா ஆசிரியர்சங்கம்.

வலம் : L. H. ஹொரேஸ் பெரேரா, உதவி செக்ரடரி ஜனரல், கல்வி டைரக்டர் (WFUNA).

நடு : WCOTP-இன் உத்தியோகஸ்தர், வில்லியம் உல்ரிச்.

ஜப்பான் ஆசிரியர்சங்கமும் ஜப்பான் உயர்நிலைப்பள்ளியாசிரியர்கள்சங்கமும் சேர்ந்து, 'ஓகாயாமா' நகரில், 1964-ஜனவரி 15-18-இல் கல்விபற்றிய ஆராய்ச்சி-குறித்து தேசியமகாநாட்டைக் கூட்டும். "சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு அமைதியை வளர்க்கத்தக்க ஜனநாயகக்கல்வித்திட்டத்தை அமைத்தல்"—என்பதே அம் மகாநாட்டின் அடிப்படைக்கொள்கை. அம் மகாநாட்டிற்கு ஜப்பான் நாட்டின் எல்லாப்பகுதிகளிலுமிருந்து 10,000 மக்களுக்குமேல் வருவர் என்பது எதிர்பார்க்கப்படுகிறது.

WCOTP-செக்ரடரி-ஜனரல் வில்லியம் G. கார், கொரியாநாட்டுக்கல்விச்சங்கங்களின் சமஷ்டிக்கு 1964-ஆண்டுக்கல்வியைப்பற்றிய கூட்டாராய்ச்சிக்கூட்டம் கூடும்பொழுது, எழுதியனுப்பியது பின்வருமாறு (அக் கூட்டத்தில் ஆராயப்படும் விஷயம்: கல்வித்தரத்தை உயர்த்துதல்):

"முதல்தரக்கல்வியை அளித்தல் வேண்டும் என்னும் இலட்சியத்தை அடைதற்கு ஏற்படும் இடையூறுகள் பல. நாம் அவற்றை வென்று அந்த இலட்சியத்தை அடைதல்வேண்டும். நமக்கு இப்பொழுது அவசியம் வேண்டுபவை: குழந்தைகளுக்குத் தனித்தனியாகக் கற்பித்தற்கு ஆசிரியர்க்கு வேண்டும் அதிகநேரம்; பள்ளிக்கூடங்கள் கற்பிக்கும் பாடமும் முறையும் நவீனகாலத்தையொட்டி இருத்தல்; உத்தியோகத்தை அடைதற்கும் ஓய்வுக்காலத்தை நன்கு பயன்படுத்தற்கும் ஏற்றவாறு மனிதனுக்கு முழுவளர்ச்சியை அளிக்கத்தக்க பாடத்திட்டம்; கற்பித்தற்குவேண்டிய தற்கால உபகரணங்கள்; விஞ்ஞானத்தால் அளிக்கப்பட்ட புதுக்கருவிகளின் வலிமையை ஆசிரியர்கள் நன்கு அறிதல்; குழந்தைகளைப் பிற்காலத்தில் சிறந்த குடிமக்களாக ஆக்குதற்கு வேண்டிய பள்ளிக்கூடத்திட்டங்கள்.

"உங்கள் மகாநாட்டுக்கொள்கை, கல்விவளர்ச்சிப்பாதையில், மேலும் ஒரு படி ஆகும்; அன்றியும், இன்று உலகமுழுதும் உள்ள கல்விநிலையில் ஒரு முக்கிய மாறுபாடும் ஆகும். முன்பு நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடத்துக்கு வருதல் வேண்டும் என்று கவலைப்பட்டோம்; இன்றோ, ஒவ்வொரு குழந்தையும் பள்ளியிலிருந்து எத்துணை நன்மையைப் பெறுகின்றது என்பதைப்பற்றிக் கவலைப்படுகின்றோம்.

ஐரோப்பா:

WCOTP-இன் உறுப்புச்சங்கமாகிய 'இங்கிலாந்து தொழிற்கல்விக் கலைக்கூடங்களின் ஆசிரியர்சங்கம்', தன் 54-ஆம் ஆண்டு மகாநாட்டில், பின்வருமாறு தீர்மானஞ்செய்தது: "தொழிலுக்கு வேண்டிய பயிற்சிக்கூடங்களை நிறுவுதல் வேண்டும்; இளந்தொழிலாளிகள் மேலும் பயிற்சிபெற விரும்பின், அதற்கு வாய்ப்பளித்தல் வேண்டும்; தக்க கல்வியைப் பெறுதற்கு ஓய்வளித்தல் வேண்டும்; கல்லூரியதிகாரிகள், பிறகல்வித்துறையாசிரியர்கள் ஆகியோரின் அனுபவம் இப் பயிற்சிச்சங்கங்களுக்கு இன்றியமையாதது ஆதலின், அவர்களையும், உள்ளூர்க் கல்வியதிகாரிகளையும் ஆசிரியர்சங்கங்களையும் அச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். தொழிற்கல்விப்பயிற்சி முன்னேற்றத்துக்கு அமைக்கப்படும் ஸ்தாபனங்களில் அவர்களைப் பிரதிநிதிகளாய்ச் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்."

'UNESCO கல்வியாராய்ச்சிக்கூடத்தின் ஆதரவில், ஹாம்பர்க் நகரில், பல்வேறு கல்விமுறைகளையொட்டிய பள்ளிக்கூடங்களில், படிப்பின் ஒவ்வொரு கட்டமும் முடிந்தவுடன், அடையும் பயனை அளந்தறிதற்கு ஓர் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்; தேசங்களில் உள்ள மாணுக்கருக்குப் பல்வேறு வினக்கள் அனுப்பப்படும். முதன்முதல் கணிதப்பாடத்தில் இவ்வாராய்ச்சி நிகழ்த்தப்படும். பெல்ஜியம், இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, ஃபின்லாந்து, ஃப்ரான்ஸ், ஹாலந்து, இஸ்ரேல், ஜப்பான், ஸ்காட்லாந்து, ஸ்வீடன், U.S.A. என்னும் பதினொரு நாடுகளில் உள்ள கல்வியாராய்ச்சித்தேசீயக்கழகங்களின் பிரதிநிதிகளும், ஒப்புக்கல்வியிலும் கணிதத்தைக் கற்பதிலும் கைதேர்ந்த அறிஞர்பலரும், அண்மையில் 'ஹாம்பர்க்' நகரில் இத் திட்டத்தை இறுதியாக வகுப்பதற்கு, கூடினர்.

கல்வித்துறையில் ஏற்றத்தாழ்வு இருத்தலாகாது என்று போராடிவரும் Unesco-கொள்கைத்திட்டத்தை டென்மார்க் தேசம் ஒப்புக்கொண்டுள்ளது. இதற்கு முன் 17 நாடுகள் அக் கொள்கைக்கு ஆதரவளித்துவருகின்றன. 1962 மே மாதம் அமுலில் இருந்துவரும் இக் கொள்கையின்படி, இதனை ஒப்புக்கொண்ட அரசாங்கங்கள் ஜாதி, நிறம், பால், மொழி, சமயம், அரசியல் முதலிய கருத்துவேறுபாடு, பொருளியல்நிலை, பிறப்பு முதலிய—கல்வித்துறையில் எல்லாரையும் சமமாக நடத்துதல் வேண்டும் என்னுங் கொள்கைக்குத் தீங்கு விளைக்கின்ற—எந்த வேறுபாட்டையும் நீக்கிவிடவேண்டும்; 'டென்மார்க்', நாடுகளுக்கிடையே இக் கொள்கையைப்பற்றிய மாறுபட்ட கருத்துக்கள் தோன்றுமாயின், அவற்றைத் தீர்த்துவைப்பதற்குச் சங்கமொன்றனையும் நிறுவியுள்ளது.

முன்னேற்றமடையாத நாடுகளுக்கு, ஏறத்தாழ 5,000 ஆங்கிலநாட்டு ஆசிரியர்கள் தொண்டுசெய்துவருகின்றனர். அந் நாடுகளிலிருந்து ஏறத்தாழ 45,000 மாணக்கரும் தொழிற்கல்விப்பயிற்சிபெறுவோரும் இங்கிலாந்தில் கல்விபயின்றுவருகின்றனர். இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகங்களில் உள்ள பன்னிருவருக்கு ஒருவர், ஆஃப்ரிக்கா, ஆசியா, காரிபியன் அமெரிக்கா, லத்தீன் அமெரிக்கா என்னும் நாடுகளிலிருந்து வந்தவராவர். இதைப்பற்றிய முழு ஆராய்ச்சிவிவரம், 'கல்வியுதவி' என்னும் துண்டுப்பிரசுரத்தில் காணலாம். அது 'நஃபீல்டு' ஸ்தாபனத்தின் மானியவுதவியைக்கொண்டு 'பிறநாட்டுவளர்ச்சிக்கழகத்தால்' வெளியிடப்பட்டுள்ளது.

'ஃபிலிப்பைன் பப்ளிக் ஸ்கூல்' ஆசிரியர்சங்கத்தின் புதிய கல்விமாளிகை. இதன் மூன்றும் மாடியில் தனித்தனி அலுவலகங்களும், மகாநாடு கூடுதற்குரிய ஓர் அறையும் இருக்கின்றன. அச் சங்கம் இதற்குமுன்பு பெற்றிருந்த எல்லாக் கட்டிடங்களைக்காட்டிலும் அதிக இடப் பரப்பை இப் புதுமாளிகை பெற்றுள்ளது.

பணிப்பிக் :



நியூஜிலாந்து கல்விச்சங்கம், 'மிக நல்ல முறையில் போதனுமுறைப்பயிற்சி அளிக்கப்படல்வேண்டும்' என்பதனை வற்புறுத்தி அச்சிட்டு வெளியிட்ட துண்டுப்பிரசுரமொன்றனை அந் நாடுமுழுதும் வழங்கிவருகின்றது. இப் படத்தில் காட்டப்பட்ட அவ் வெளியீடு ஆசிரியராய் நியமிக்கப்படுவோர் மிக நல்ல தகுதிகளைப் பெற்றிருத்தல்வேண்டும்; ஆசிரியர்களுக்கு இன்னும் அதிகக் காலவளவு போதனுமுறைப்பயிற்சி அளித்தல் வேண்டும்; வகுப்புக்களில் உள்ள மாணுக்கரின் எண்ணிக்கை குறைவாய் இருத்தல்வேண்டும்— என்னும் இக் கருத்துக்களை வற்புறுத்துகின்றது; மேலும், 'ஆசிரியர்பலரை நியமித்தல், இப்பொழுது இருப்போரை விடாமல் வைத்துக்கொள்ளுதல், விட்டுச்சென்றோரை மீண்டும் அழைத்துச்சேர்த்தல் என்னும் இம் மூன்றனையும் செய்தால்தான் நாம் கொண்ட குறிக்கோளை அடைதல் இயலும். அப் பணியை இப்பொழுதே தொடங்குதல்வேண்டும். இத்தகைய மாறுதலைச் செய்தற்குப் பெற்றோரும் ஆசிரியரும் அரசாங்கத்தைத் தொடர்ந்து வற்புறுத்துதல்வேண்டும்' என்றும் அறிவிக்கின்றது.

"கல்வி—யாருடைய பொறுப்பு?" என்பது ஆஸ்திரேலியாவில் வருஷாந்திரக்கல்விவாரத்தின் பொருளாகும். அது வானொலி, 'டெலிவிஷன்' இவற்றின்மூலம் விளம்பரப்படுத்தப்பட்டது. போதனுமுறைகளில் உள்ள தற்கால மாறுதல்களை விளக்கும் படங்கள் ஆசிரியர் போதனுமுறைக்கல்லூரிகளால் விளக்கிக் காட்டப்பட்டன. மாணுக்கர்களின் வேலைகளை விளக்குங் காட்சிப்படங்களும் முக்கிய நகரங்களில் காட்டப்பட்டன.

இந்த மாதவெளியீடுமுதல் மலேயா, சிங்கப்பூர், சாரவாக், சபா, ப்ரூனி என்னும் நாடுகளில் உள்ள ஆசிரியர்களுக்கு விநியோகிக்க, எகோ பத்திரிகை மலாய்மொழியிலும் அச்சிட்டு வெளியிடப்படும். ஆக, இனி, இப் பத்திரிக்கை பதினொன்றுமொழிகளில் —(இங்கிலீஷ், ஃப்ரெஞ்சு, ஸ்பானிஷ், ஜப்பானீஸ், அரபு, வியட்நாமிஸ், போர்ச்சுகீஸ், கொரியன், சீனம், தமிழ், மலாய்)—பிரசுரிக்கப்படும்.

ஆசிரியர்நிலையைக்குறித்து ILO மகாநாடு கொண்ட முடிவினைப்பற்றிய WCOTP விளம்பரம்

'WCOTP மகாநாடுகளிலும் ஆராய்ச்சிகளிலும் ஆசிரியர்களின் நிலையைக்குறித்துக் கூறிய கருத்துக்கும், ILO மகாநாட்டில் ஆசிரியர்களின் சமூக, பொருளாதார

நிலைகளைக்குறித்து, நிபுணர்கள் கொண்ட முடிவுக்கும், மிக்க ஒற்றுமை உள்ளது'—என்று WCOTP செகரடரி-ஜனரல், Dr. வில்லியம் G. கார் அண்மையில் அறிவித்தார்.

'ஜெனீவா' நகரில் அக்டோபர் 21 முதல் நவம்பர் 1 வரை, WCOTP உபதலைவரான ஸ்ரீ S. நடராஜன் அவர்களின் தலைமையின்கீழ்க் கூடிய மகாநாட்டுக்கு 24 தேசங்களிலிருந்து கல்வித்துறையில் தேர்ந்த நிபுணர்கள் விஜயஞ்செய்தனர். அக் கூட்டத்தின் முடிவுகளை Dr. கார் WCOTP உறுப்புச்சங்கங்களுக்குக் கடிதத்தின்மூலம் அறிவித்துள்ளார். அதில் ஆசிரியர்நிலையின் முன்னேற்றத்தைக்குறித்து WCOTP செய்த பணியின் வரலாற்றை முறையாகக் கூறியுள்ளார்:—(1) ஆசிரியர்நிலையைப் பாதிக்கும் 19 பகுதிகளைச் சுட்டிக்காட்டி 1955-இல் செய்த ஆராய்ச்சி. இதுவே இத் துறையில் உலகமுழுதும் செய்யப்பட்ட முதலாராய்ச்சி. (2) WCOTP தலைவர் ஸர் ரோனல்டு கோல்டின் தலைமையின்கீழ் 1959-இல் கூடிய நிபுணர்கூட்டம். (3) S. H. M. ஜோன்ஸ் வெளியிட்ட "ஆஃப்ரிக்ஆசிரியர்நிலையைப்பற்றிய ஆராய்ச்சி"—(1961-62). (4) 1963-இல் புதுடில்லியில் ஆசியஆசிரியர்கள்நிலையைக்குறித்து ஆராய்ந்த நிபுணர்கூட்டம். (5) சென்ற ஸெப்டெம்பர் மாதத்தில் 'நியாமி' நகரில் (நைஜர்), ஆஃப்ரிக்க ஆசிரியர்களின் நிலையை ஆராய்தற்குக் கூடிய அகில ஆஃப்ரிகமகாநாடு. (6) ஸ்ரீமதி மார்கரிடா டேனிஸ் அண்மையில் எழுதி முடித்துள்ள "அமெரிக்க ஆசிரியர்களின் நிலையைப்பற்றிய ஆராய்ச்சி"—என்னும் நூல். அது 1964-இன் முற்பகுதியில் வெளியிடப்படும்.

பின்வருபவை, அந் நிபுணர்கூட்டம் செய்த முடிவுகளுள் சில: "தகுதியும் அனுபவமும் உள்ள ஆசிரியர்களின் பற்றுக்குறை பல நாடுகளில் மிக அதிகரித்துவிட்டது; வருங்காலத்தில் இந் நிலை மேலும் மோசமாகிவிடும். இப் பற்றுக்குறையை நீக்க வேண்டுமாயின், ஆசிரியர்களின் கடமை பண்பாட்டிற்கும் சமூகத்திற்கும் செய்த தொண்டு இவற்றிற்கு ஏற்ப, அவர்களின் அந்தஸ்தும் மதிப்பும் மிகுதல் வேண்டும்; அவர்களுக்குரிய அந்தஸ்து உறுதிசெய்யப்படுதல் வேண்டும். அவர்களுக்கு யாதொரு குறையும் வாராமல் தடுக்கச் சட்டப்பாதுகாப்பு வேண்டும்."

"ஒரே யோக்கியதையுள்ளவர்—அந் நாட்டவராயினும் அல்லராயினும்—சமமாக நடத்தப்படுதல்வேண்டும். ஆசிரியர்களை நியமனஞ்செய்தல், அவர்களுடைய உத்தியோகவாழ்க்கை வேலையை விட்டு விலகுதல் இவற்றில், தொழில்தகுதிகளைத் தவிர, வேறு எந்தக் காரணத்தையும் (ஜாதி, பால், நிறம், மணமுறை, கொள்கை, சமயம்) கொண்டு எந்த வேறுபாடும் காட்டலாகாது. பெண்கள் மணஞ்செய்துகொண்டபின் ஆசிரியத்தொழிலில் இருத்தலாகாது—என்று தடைவிதிக்கக்கூடாது."

ஆசிரியர்கள் வேலைசெய்யும் மணிகளைக் கணக்கெடுக்கும்பொழுது, கற்பிக்குங் காலத்தோடு, பாடங்களைத் தயாரித்தல், பயிற்சிகளைத் திருத்துதல், பள்ளிக்கு வெளியில் செய்யுங் கல்விப்பணிகள் முதலியவற்றையும் சேர்த்துக்கொள்ளல்வேண்டும். முன்னேற்றமடைந்த நாடுகளிலும் ஆசிரியரின் பொருள்நிலை திருப்திகரமாக இல்லை. ஆதலின், எல்லாநாடுகளிலும் அவர்களின் வாழ்க்கைவேலைநிலைகள் கணிசமாக உயர்த்தப்படல் வேண்டும். ஆசிரியர் பெறும் ஊதியம், தமக்கும் தம் குடும்பத்தினர்க்கும் கணிசமான வாழ்க்கையை நடத்துதற்கேற்றவாறு இருத்தல்வேண்டும்; இவர்களின் கல்வித்தகுதி, பயிற்சி, ஆற்றல் இவைபோன்ற யோக்கியதையைப் பெற்றவர் பிற துறைகளில் பெறும் ஊதியத்துக்குக் குறைதலாகாது."

குறிப்பிட்ட காலவரையறைக்குமேலும் வேலைசெய்யும் ஆசிரியர், வயதுமுதிர்ந்த ஆசிரியர்க்குரிய வேலைக்காலவளவு, விடுமுறை, ஆசிரியர்சங்கங்கள்—முதலியவற்றைப்பற்றியும் அக் கூட்டம் முடிவு செய்துள்ளது.

———

அரபு நாடுகள்:

அரபுநாடுகளுள் டுநீஷியா கல்வித்துறையில் மிக்க முன்னேற்றத்தை அடைந்துளது. 1956-க்கு முன்பு, ஆங்குப் பத்து வயசுக்கு மேற்பட்டோருள் 85 சதவிகிதம் எழுதப்படிக்கத் தெரியாதவர்; 28 சதவிகிதக் குழந்தைகளே பள்ளிக்குச் சென்று பயின்றனர். இவ்வாண்டில் தொடக்கக்கல்விபெறுவோர் 526,400; 1958-59-இல் இருந்ததைவிட 65 சதவிகிதம் அதிகம். 'ஸகெண்டெரி'பள்ளியில் பயில்வோரின் தொகை 35,000; 75 சதவிகிதம் அதிகம்.

லிபியாவிலும் இத்தகைய முன்னேற்றம் காணப்படுகின்றது.

ஸிரியாவில் அண்மையில் 'விஞ்ஞானவாரம்' கொண்டாடப்பெற்றது. விஞ்ஞானிகள் பொருளியல்துறையோடு தொடர்புகொண்ட விஞ்ஞானத்தின் வளர்ச்சியைப்பற்றிய கருத்துக்களை அறியவும் அறிவிக்கவும், அவ் வாரம் நல்வாய்ப்பளித்தது. அவ் வாரத்தில் இரண்டு நாள் பொறியியல்உழவுக்கலைகளுக்கும், ஒரு நாள் மருத்துவக்கலைக்கும் ஒதுக்கப்பட்டன.

———

பாரிஸ் நகரில் ரேனே மேஹ்யூ என்னும் அறிஞர்க்கு, ''போரும் அமைதியும்'' ("War and Peace")—என்னும் நூல் அளிக்கப்பட்டது. அப்பொழுது அங்கு வந்து சிறப்பித்தோர்: (இடமிருந்து வலம்) ஸ்ரீமதி டி. ஸில்வா, Dr. C. E. பிபி, திரு. ஈபர்ட், திரு. மேஹ்யூ.

———

பாடப்புத்தகத்திலிருந்து: 1. The Burghers of Calais-இலிருந்து ஒரு செய்தி. 2. 'டிராய்'நகரின் வீழ்ச்சியை விளக்கும் கிரேக்க ஜாடி. 3. இந்திய குகைக்கோயிலில் உள்ள 'சிவன்-திரிபுராந்தகன்' என்னுஞ் சிற்பம்.

1

2

3

கலைமூலம் மனிதனை அறிதல்

"கலைமூலம் மனிதனை அறிதல்" ('Man through his art') என்னும் நூல்வரிசையின் முதற்பகுதியான 'போரும் அமைதியும்' என்னும் நூல் அண்மையில் 'பாரிஸ்' நகரில் உள்ள Unesco மாளிகையில், ஒரு சிறப்புக்கூட்டத்தில், Unesco டைரக்டர்-ஜனரலான 'ரேனே மேஹ்யூ' என்னும் அறிஞர்க்கு ஸமர்ப்பிக்கப்பட்டது. கிழக்குமேற்குப்பண்பாட்டுப்பெருமையைப் பரஸ்பரம்அறிதற்கு Unesco பெருந்திட்டமொன்று வகுத்துள்ளது. இந் நூல்வரிசை அப் பணியில் WCOTP-யின் பங்காகும். ஒவ்வொரு பகுதியும் மனிதவாழ்வின் நிலைபேறுடைய பொருளொன்றனைப்பற்றிக்கூறும். பல்வேறு காலங்களில் பல்வேறு பண்பாடுகளில் உள்ள தலைசிறந்த கலைகளை விளக்கும் படங்கள் அதில் இடம்பெறும்.

WCOTP பாரிஸ் கிளையின் 'டைரெக்டர்'ரான 'வில்ஹெம் ஈபெர்ட்' அந் நூலை அளிக்கும்பொழுது பின்வருமாறு கூறினர்: "மொழிவேற்றுமையால் உள்ள இடையூறுகளை அனைவரும் அறிவர். ஆயின், உலகில் உள்ள ஒவ்வொருவராலும் அறியப்படும் மொழி ஒன்று உளது. அது கலைமொழி — இசை, படங்கள், சிற்பம் ஆகிய மொழி. எல்லார்க்கும் விளங்கும்படி அது பேசுகின்றது; அதுமட்டும் அன்று; மக்களை மாற்றுகின்றது; அறிவுபெறச் செய்கின்றது. இவ்வுண்மையை நாம் அறிந்திருக்கச் செய்தேயும், ஆசிரிய அறிஞர்க்குப் பயன்படுமாறு, உலகப்பண்பாடுகளின்

தலைசிறந்த பகுதிகளை உதவுங் கலைக்கூடம் ஒன்றுமில்லை என்பது உண்மை. தக்க காலத்தில் தக்கவிடத்தில் பயன்படுமாறு, போதனைக்குரிய கருவிகள் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படல் வேண்டும்.''

அந் நூலைப் பெற்றுக்கொண்ட ரேனே மெஹ்யூ (Unesco Director-General) தம் நன்றியைத் தெரிவிக்கும்போது கூறியது வருமாறு: ''இத் திட்டம் சாதாரண வீரச்-செயல்மட்டுமன்று; மிக்க பொருள் பொதிந்ததுமாகும். இவ் வரிசை 'போரும் அமைதி-யும்' என்பதில் தொடங்குவதைக்குறித்து நாங்கள் பாராட்டுகின்றோம். இப் படப்புத்தகத்தில் முதலில் வேட்டையையும் போரையும்பற்றிய படங்களும், போகப்போக, இன்-பத்தையும் அமைதியையும்பற்றிய படங்களும் அமைக்கப்பட்டிருக்கும் முறை மிக்க பொருள் நிறைந்ததாகும். மனிதன்கலையில் அமைதிக்கருத்து மேலும்மேலும் தெளி-வாக உளது என்பதனை இது விளக்குகின்றது.''

'போரும் அமைதியும்' என்னும் நூல், 3500 கி. மு.-இலிருந்து இன்றுவரை உள்ள கலைச்செல்வங்களைப் பெற்றுளது. இவ் வரிசையில் உள்ள பிற்பகுதிகளின் தலைப்பு: இசை; மனிதனும் மிருகமும்; விழாக்கள்; குடும்பம்; காதலும் கலியாணமும்; கனவும் கற்பனையும்—முதலியவை ஆகும். இவற்றைப்பற்றிய எல்லா விவரங்களையும் கீழ்க்காணும் முகவரிக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்: Educational Productions Ltd., East Ardsley, Yorkshire, England.

காலஞ்சென்ற தலைவர் கென்னடி 1961-இல் புதுடில்லியில் WCOTP பிரதிநிதிகள் மகாநாடு தொடங்குதற்குமுன், WCOTP செக்ரடரி-ஜனரலான வில்லியம் G. கார் என்பாருக்கு எழுதிய கடிதத்தின் சுருக்கம்: '' இவ் வாசிரியர்மகாநாட்டில் உரிமை-பெற்ற உலகத்தின் சார்பாக நீங்கள் கலந்து-கொள்வதனால் மிக்க ஆக்கமும் பயனும் விளைதல்கூடும். இவ்வரசாங்கம், கல்வி-முன்னேற்றத்திலும் ஆசிரியர்களின் பொருள்நிலையை உயர்த்துவதிலும், மிக்க அக்கறைகாட்டுவது உங்களுக்குத் தெரிந்-ததே. உங்கள் மகாநாட்டில் பங்குகொள்-ளும் உலகவாசிரியரனைவரும், இக்கால-விளைஞர் வருங்காலவாழ்க்கையில் இடை-யூறுகளை வென்று வாய்ப்புக்களைப் பயன்-படுத்தி வெற்றிபெறத்தக்க கல்விமுறை-யைக் கையாளுவதில் தங்களைப்போல் சிரத்தைகொள்வர் என்று நம்புகின்றேன். உங்கள் மகாநாடு வெற்றிகரமாக முடிய வேண்டும் என்று இறைவனைத் துதிக்கின்றேன்.''

ஜான் F. கென்னடி: புகழ்மாலை

[NEA-இன் நிர்வாகக்காரியதரிசி அச் சங்கப்பத்திரிகையில் வரைந்த தலையங்கத்தின் சுருக்கம்]

"ஜான் F. கென்னடியின் கொடிய மரணத்தைக்குறித்து உலகம்முழுதும் ஒரு மாதகாலமாகத் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் நிலையில், ஆசிரியர்கள் அவர்பெருமையை அளந்தறியும் முறையை ஆராய்தல் பொருத்தமுடையதே ஆகும். அப் பதவியில் இருந்தவர்களுள் இவரே வயசில் குறைந்தவர்; குறைந்த ஆயுளில் இறந்தவரும் இவரே. இக்காலமாணுக்கர்க்கும் வருங்காலமாணுக்கர்க்கும் இவருடைய எக்குணச்சிறப்புக்களை ஆசிரியர்கள் எடுத்துரைத்தல்வேண்டும் என்பதனை ஆராய்தல் இன்றியமையாதது.

"ஜான் F. கென்னடி இளைஞரின் உற்சாகவலிமைக்குத் தக்க எடுத்துக்காட்டு; ஆயினும், முதுமையும் அநுபவமும் உள்ளோரை மதித்து, அவர்கள் அறிவுரையையும் நாடி அடைந்தார். கொடிய உத்தியோகச்சிக்கல்களை அறுப்பதில் விரைந்து முனைந்து நின்றார்; ஆயினும், முக்கிய செய்திகளைப்பற்றிப் புனராலோசனை செய்தற்கும், அறிவுமிக்க அமைச்சரின் புத்திமதியைக் கேட்பதற்கும் உரிய காலத்தை வகுத்துக்கொண்டார். அமெரிக்க மக்களிடத்தில் இவர்க்கு நம்பிக்கை உண்டு; ஆயின், பொதுச்செயல்களில் விவேகமும் நாட்டுப்பற்றும் கொண்டு ஈடுபடல்வேண்டும் என்று இவர் எச்சரித்தார். தலைசிறந்த நுண்ணறிவுக்கும் நூலறிவுக்கும் மதிப்பளித்தார்; ஆயின், கலைப்பெருமை எவ்வாறு மக்கள்வாழ்க்கையை வளம்பெறச் செய்யும் என்பதனையும் முழுதும் உணர்ந்தார். இவர் வெறுப்பினையும் வெறியையும் உறுதியாக எதிர்த்து நின்றார்; ஆயின், மனிதசகோதரத்துவம்உண்டாக்கும் முயற்சியில் சிரத்தையற்ற மாந்தர்களைப் புரிந்துகொள்ளும் ஆற்றலும் பெற்றவராவர். நாட்டுவளர்ச்சியில் ஆசிரியர்க்கும் பெற்றோர்க்கும் உரிய முக்கிய பங்கினை உணர்ந்தார்—அவரது குடும்பப்பற்றும் கல்வியில் உள்ள பக்தியும் இவ்வுணர்வினை வற்புறுத்தும். போரிலும், கொடுமையும் மனக்கசப்பும் உள்ள உடன்படிக்கையிலும், தம் அஞ்சாமையையும் நாட்டுப்பற்றினையும் வெளிப்படுத்தினார்; ஆயினும், உலகத்தில் உள்ள எல்லாநாடுகளுக்கும் இடையே நியாயமான அமைதியை நிலைநிறுத்த வேண்டிய முயற்சியில் ஒருபொழுதும் எள்ளளவும் தளர்ந்ததில்லை.

"இவை இளைஞர்க்கு அறிவிக்கவேண்டிய அறிவுரைகளுள் சில. 'நல்ல கல்வியைப் பெற்ற மக்களே அன்னாருக்குப் பொருத்தமும் நிலைபேறுடையதுமான நினைவுச்சின்னமாகும்'—என்பதனை நாம் என்றும் நினைவிற் கொள்ளல்வேண்டும்."

[மேற்கூறிய கருத்து ஒவ்வொன்றற்கும் ஆதாரமாக, இத் தலையங்கத்தில் அத் தலைவரின் எழுத்திலிருந்தும் பேச்சிலிருந்தும் மேற்கோள்கள் காட்டப்பெற்றுள்ளன.]

U. S. பிரஸிடெண்ட் கென்னடி; NEA தலைவரான ராபர்ட் H. வியட். அவர் மறைதற்கு மூன்றுநாள்முன்னர் White House-தோட்டத்தில் எடுத்த படம்.

அமெரிக்காஸ்:

ஐ. நா. ஸ்தாபனநாள் 'மாண்டிவீடியோ' நகரில் (உருகுவே) கொண்டாடப்பெற்றபொழுது 'உருகுவே டெக்நிகல்' பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நெல்ஸன் லோபஸ் ஹ்யூபர்ட்'டும் அவர் மாணாக்கர்களும் ஊர்வலமாகச் சென்ற காட்சி.

'நியூயார்க்' நகரத்தில், 'ஐ. நா. ப்ளாஸா'வில், 'ஸர்வதேசக்கல்வியாராய்ச்சிச்சங்கத்'தின் புதிய தலைமைக்காரியாலயமாளிகைக்கு அண்மையில் அடிக்கல் நாட்டியபொழுது, அவ் விழாவில் முதற்கண் பேசியவர் (U. S. Secretary of State) டீன் ரஸ்க் என்னும் பேரறிஞராவர். அச் சங்கம், 44 ஆண்டுகளாக, இலாபத்தைக் கருதாது, தொண்டாற்றிவரும் தனியார்ஸ்தாபனம். மாணாக்கர், அறிஞர், கலைஞர், பல தொழிற்றிறன்பெற்ற ஆடவர் பெண்டிர் அனைவரையும் U. S.—இலிருந்து நூறு நாடுகளுக்கு அனுப்பி, அங்கிருந்து அத்தகையோரைத் தம் நாட்டுக்கு வரவழைக்கின்றனர்.

சிலி நாட்டில், 'பல்கலைக்கழகப்பயிற்சிபெற்றவர் தொகையை இரட்டிப்பாக்கவேண்டும், ஆண்டுதோறும் 4000 பட்டதாரிகளைப் படைக்கவேண்டும்—என்னுங் குறிக்கோளோடு பல தேசீயக்கல்லூரிகளை நிறுவியுள்ளனர். இப்பொழுது அந் நாட்டுப் பல்கலைக்கழகத்தின் ஆதரவினைப் பெற்று மூன்று கல்லூரிகள் பணியாற்றிவருகின்றன; Inter-American Development Bank-இலிருந்து 2·3 மில்லியன் டாலர் கடன்பெற்று, இன்னும் இரண்டு திறக்கப்படும். அவ் விரண்டாண்டுத்தேசீயக்கல்லூரிகள் தகுதியுள்ளவர்க்கு இலவசமாகக் கற்பிக்கும். ஆங்குச் சமூகவிஞ்ஞானம், இலக்கியம், அடிப்படை விஞ்ஞானம் முதலியன கற்பிக்கப்படும். தகுதிபெற்ற பட்டதாரிகள் மேற்படிப்புக்குச் 'சிலி' பல்கலைக்கழகத்தில் சேரலாம். லத்தீன்அமெரிக்காவில் தேசீயக்கல்லூரிமுறையைக் கையாளும் நாடு இஃதொன்றேயாகும்.

பிரேஸில்-நாட்டில் 'ஸெள பௌலோ' நகரில் 5 நாள் வேலைநிறுத்தஞ்செய்த 82000 ஆசிரியர்கள், ஆரம்பவாசிரியர்கள் 60 சதவிகிதம் அதிக ஊதியம்பெற்றதனால்,

மீண்டும் தம் பணியில் ஈடுபட்டுவிட்டனர். ஒவ்வோராசிரியர்க்கும் சராசரி மாத-வருமானம் 100 டாலருக்குச் சமமாகும்; வேலை வாரம் 15 மணி நேரம். அவ் வேலை-நிறுத்தத்தில் பள்ளிக்கூட நிர்வாகிகளும், 'ஸெகண்டரி'ப் பள்ளியாசிரியர்களும் கலந்து-கொண்டனர்.

'வெநிஸூலா'வில், 'ரேடியோ காரகஸ்' 'கிண்டர்கார்டன்' குழந்தைகளுக்காகத் தினந்தோறும் அரைமணி 'டெலிவிஷன்' ஒலிபரப்பைத் தொடங்கியுள்ளது. 100-க்கு மேற்பட்ட 'கிண்டர்கார்டன்' பள்ளிகளில் உள்ள 3000 குழந்தைகள் இத் திட்டத்தால் பயன்பெறுகின்றனர்.

கொலம்பியா-நாட்டைச் சார்ந்த Dr. காப்ரியல் பெடங்கர் மேஜியா என்னும் அறிஞர், Unesco-இன் கல்வித்துறையில் பணியாற்றும் பொறுப்பினை ஏற்க, 'டைரக்டர்-ஜனர'லாக நியமிக்கப்பெற்றுள்ளார்; இதற்குமுன்னர் அந் நாட்டுக்கல்வியமைச்ச-ராகவும், அமெரிக்கநாடுகளின் கல்விமுன்னேற்றத்தனிக்கமிஷனுக்குத் தலைவராகவும், 'கொலம்பியா தொழிற்கல்விக்கழக'த்தின் டைரெக்டராகவும் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

ஆஃப்ரிகா:

பல பாடப்புத்தகங்களுக்கு ஆசிரியரும், 'யௌண்டே'யில் (காமரூன்) தொடக்கப்-பள்ளிகளின் மேற்பார்வையாளருமாகிய 'பால பார்க்க ஹென்றி' என்பவர் அண்மை-யில் WCOTP தலைமைக்காரியாலயத்துக்கு விஜயஞ்செய்தார்.

காங்கோ-வில் 'UNESCO சங்கம்' அண்மையில் நிறுவப்பட்டதென்றும், அதற்கும் அந் நாட்டுத் தொழிலாளர்சங்கங்களுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்றும்— 'ஜோஸஃப் இம்பென்ஸா டூபி' ஸெக்ரடெரி-ஜனரலுக்கு அறிவித்தார். அதன் தலைவர், 'வாலென்டின் கிபாபு; ஸெக்ரடெரி-ஜனரல், திரு. இப்பென்ஸா. அவ்விருவரும் 'ரியோ டி ஜனீரோ' மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

WCOTP-நைரோபி கருத்தரங்கின் ஒலிப்பதிவுப்பிரதியொன்றனை (film) வில்லியம் கார், Unesco டைரெக்டர்-ஜனரலுக்கு அனுப்பினர்; 'தேசீய கிளை ஊர்க்-கருத்தரங்குகளை நடத்துதற்குரிய வழிகாட்டி' - என்னும் WCOTP வெளியீட்டோடு பயன்படுத்தப் பரீக்ஷார்த்தமாக அப் படம் பிடிக்கப்பட்டது; அவ்விரண்டும், எல்லாத் தேசீயச் சங்கங்களுக்கும் புதுவலிமை அளிப்பதற்கும், ஆசிரியர்நிலையை உயர்த்து-தற்கும், ஆசிரியர்சங்கத்தின் வேலையை விளம்பரப்படுத்துதற்குமே வெளியிடப்பட்டன". என்று கடிதமொன்றும் எழுதியுள்ளார்.

WCOTP-காரியாலயத்துக்கு விஜயஞ்-செய்த 'நைஜீரியா ஆசிரியர் சங்க'ப் பிரதி-நிதிகள் இருவர். இடம்: E.C. எழக்வெஸிலி, (ஆகா) 'ஸெயிண்ட் பால்' கல்லூரித் தலைவர்; 'பிஷப் லூஷஸ் மதுபுகோ உமோடிகே.

பல்வேறு தலைப்புக்களில் ஆராய்ச்சிசெய்யப்பட்ட 'மேற்கு நைஜீரியாவில் பெண்கள் கல்வி' என்னும் நூலை அண்மையில் நைஜீரிய பல்கலைக்கழகப்பெண்கள் சங்கம்' (இபடான் கிளை) வெளியிட்டுள்ளது. அதைப்பற்றிய விவரம் வேண்டுவோர் இவ் விலாஸத்துக்கு எழுதுக: "ஸ்ரீமதி T. ஓடிண்டி, காரியதரிசி, நைஜீரிய பல்கலைக்கழகப்-பெண்கள்சங்கம், இபடான் பல்கலைக் கழகம், இபடான், நைஜீரியா."

ஆயிரத்துக்கு மேற்பட்ட ரேடியோக்கள் (transistorized radios), 'எட்டுவாரப் பள்ளிக்கூட ஒலிபரப்புத்திட்டத்தைக் கோடையில் நடத்துதற்கு, கென்யா நாட்டிலுள்ள ஆஃப்ரிக ஆரம்பப்பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான பலதிறப்பட்ட பள்ளிகளில் உள்ள இளைஞர் அதனைக் கேட்டுப் பயன்பெற்றனர். தற்காலப்பள்ளிப்-பாடத்திட்டத்துக்குத் துணைசெய்யவே இவ்வொலிபரப்புத்திட்டம் தொடங்கப்-பெற்றுளது.

தங்கநீகா-வின் பல பகுதிகளிலிருந்தும் ஆசிரியர் முப்பதின்மர், முதன்முதல் தொடங்கப்பெற்ற 'குருடர் பள்ளிக்கூட ஆசிரியர் பயிற்சி'வகுப்பில் வந்துசேர்ந்து பயில்கின்றனர். இவ்வரிய கல்விப்பயிற்சியில் முன்னமேயே தகுதிபெற்ருேருக்கென்று, குறைந்தகாலப்பயிற்சிவகுப்புக்களும் நடைபெறுகின்றன. 'மனுச்செய்தோரணைவரையும் சேர்த்துக்கொள்ள முடியவில்லையே' என்று, அந் நாட்டுத்தலைமைக்கல்வியதிகாரி, அவ் வகுப்பினைத் தொடங்கிவைத்தபொழுது கூறி வருந்தினர். இதற்கு முழு ஆதரவளிப்பது, குருடர்க்குத் தொண்டுசெய்ய அமைத்த 'ராயல் காமன்வெல்த் சங்கம்' என்னும் ஸ்தாபனமேயாகும்.

'உகாந்தா அரசாங்க உபகாரச்சம்பளக்கமிட்டி'யின் தலைவரான Dr. மார்டின் அலிகர், "மேற்கு ஐரோப்பா, கிழக்கு ஐரோப்பா, U.S.A., கனடா இவற்றில் உள்ள நாடுகள், உகாந்தாவில் உள்ள 90 மாணுக்கர்க்கு உபகாரச்சம்பளம் உதவுகின்றன; அடுத்த ஆண்டில் இன்னும் அதிக உதவியைப் பெறலாம்"—என்று, கம்பாலா-வில் பத்திரிகைநிருபர்பேட்டியில் கூறினர். அவர் மூன்றுமாதகாலம் பல நாடுகளில் சுற்றுப்பிரயாணஞ்செய்ததன் பயனுக, அந் நாடு இவ்வுதவியைப் பெறுகின்றது.

தலைமைக்காரியாலயம்:



WCOTP 1964 'காலெண்டர்'ப் பிரதிகள் கிளைச்சங்கங்களுக்கும், 'எடுகேஷன் பனேரமா" சந்தாதார்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. 'இங்கிலீஷ், ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ்' என்னும் மூன்று மொழிகளில் வெளியிடப்பெற்ற அக் காலெண்டரில், WCOTP-யின் வேலைவிவரத்தையும், கல்விகற்கும் உலகச்சிறுவர்களின் படங்களையும் காணலாம். தனிப்பிரதியின் விலை : 75 ஸெண்ட்.